## சாட்சிய வாக்குமூலம்

### மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 28 /2025

அரசு தரப்பு சாட்சி 5 (LW – 5) நாள் 20.01.2026

பெயர் ராஜேஷ் கிராமம்

தந்தை பெயர் ரவி தொழில் வெல்டிங் வேலை

தாலுக்கா வயது 23/2026

(குற்றம் சாட்டப்பட்ட நபர் காணொலி மூலமாக முன்னிலைப்படுத்தப்பட்டார். அவர் சார்பில் திரு. மதன், வழக்கறிஞர் (1931/2022) முன்னிலையாகி சாட்சி விசாரிப்பதில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்தார். எனவே, சாட்சி விசாரிக்க அனுமதிக்கப்படுகிறது)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நீதிமன்றத்தில் உள்ள காணொலி பெட்டியில் சிறையிலிருந்து ஆன்லைன் மூலமாக முன்னிலையாகியுள்ள குற்றம்சாட்டப்பட்ட நபரை காட்டி கேட்டபோது சாட்சி அவரை தெரியும் என்றும் அவர் ரஞ்சித் என்றும் பெயர் குறிப்பிட்டு அடையாளம் காண்பித்தார். நான் வரதம்பட்டு, கீழத்தெருவில் வசித்து வருகிறார். வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அசா 1 முதல் 4 வரையான சாட்சிகள் என் நண்பர்கள் அவர்களை தெரியும். நான் இந்து ஆதி திராவிடர் வகுப்பை சேர்ந்தவர். 03.07.2024 அன்று இரவு சுமார் 9.30 மணியளவில் வரதம்பட்டு பழவற்றங்கரை பாலத்தில் நானும் என் நண்பர்கள் சரத், இறந்து போன ராஜேஷ் ஆகிய மூவரும் பேசிக்கொண்டிருந்தோம் அப்போது சுமார் 10.00 மணியளவில் நடராஜபுரத்தை சேர்ந்த பூபாலன், வினேத்ராஜ், உதயராஜ் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். நாங்கள் ஆறுபேரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது இறந்துபோன ராஜேஷ் தனக்கு வயிறு வலிப்பதாக சொல்லி சுமார் 10-10.10 மணியளவில் நடராஜபுரம் – பட்டவர்த்தி வழியாக செல்லும் சாலையில் உள்ள பாரத் பெட்ரோல் பங்கில் மலம்

R. Rajesh.

கழிப்பதற்காக சென்றார். அவருக்கு இடது காலில் அறுவை சிகிச்சை செய்து செயற்கை கால் பொருத்தப்பட்டுள்ளதால் அவரால் சாதாரண கழிவறையில் மலம் கழிக்க முடியாது அதனால் அங்குள்ள வெஸ்டர்ன் டாய்லெட்டில் மலம் கழிக்க சென்றார். அவர் சென்று நேரமாகிவிட்டதால் வினோத்ராஜ் அவரில் போன் மூலம் ராஜேஷ்கு போன் செய்தார். அவர் போன் எடுக்கவில்லை என்று சொன்னார். நேரமாகிவிட்டதால் செல்லும் வழியில் அழைத்து செல்வதாக சொல்லிவிட்டு உதயராஜ், பூபாலன், வினோத்ராஜ் ஆகியோர் இருசக்க வாகனத்தில் சென்றார்கள். பிறகு சுமார் 10.30 மணியளவில் அவர்கள் மூவரும் பதட்டத்துடன் கத்திக்கொண்டு உத்தண்டராயன்பேட்டையை சேர்ந்த ரஞ்சித் என்பவர் ராஜேஷை வெட்டிக்கொன்று விட்டார் என்று திரும்ப வந்து சொன்னார்கள். நாங்கள் கத்திக்கொண்டு சம்பவ இடத்திற்கு ஓடினோம். அங்கு போய் பார்த்தபோது ராஜஷே் தலை மற்றும் முகத்திலும் வெட்டுப்பட்டு இறந்து கிடந்தார். அவர் அருகில் கட்டம் போட்ட கைலி ஒன்று கிடந்தது. அவரின் இருசக்கரவாகனம் அங்கு இருந்தது. ரஞ்சித் என்பவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். அவர் கள்ளர் வகுப்பை சேர்ந்தவர். அவரக்கு ஆதி திராவிடர்களை கண்டாலே பிடிக்காது, அவர் மீது PCR வழக்குகள் நிறைய உள்ளது. நடராஜபுரத்தை சேர்ந்த அரவிந்த் என்பவர் மீது ரஞ்சித் ஆட்டோவால் மோதி அரவிந்த் 10, 15 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். இதனால் இறந்து போன ராஜேஷ் தன் நண்பர்களை அழைத்து கொண்டு ரஞ்சித் வீட்டிற்கு நஷ்ட ஈடு கேட்டு சென்றார். சென்ற இடத்தில் இருதரப்பினருக்கு சண்டை ஏற்பட்டு மணல்மேடு காவல் நிலையத்தில் இரு தரப்பினர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இறந்து போன ராஜேஷ் பட்டவர்த்தி கடைத்தெருவிற்கு செல்லும் போது அவர் மேலே காலை தூக்கி போட்டு இருசக்கர வாகனத்தில் உட்காருவார் அதை ரஞ்சித் பார்க்கும் போது கால் இல்லாத பறப்பைய இவன் எப்படி நம்ம ஏரியாவில் கெத்தா உட்கார்ந்திருக்கான் பாரு அவனுக்கு என்றைக்காக இருந்தாலும் என் கையாலதான் சாவு என்று சொல்லி

R. Rajesh.

வந்தாததாக ராஜேஷ் என்னிடம் சொன்னார். அவர் சொன்னது போலவே ராஜேஷை வெட்டி கொலை செய்து விட்டார். இது சம்பந்தமாக மயிலாடுதுறை துணைகாவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

R. Rajesh.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு. அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

20/1/17

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை